# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 2010 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம்

*(2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

2010, நவெம்பர் மாதம் 04 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 2.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## ***2010 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம்***

*[2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]*

*ச.வ.ஓ. 35/2008*

## ***1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப்பெயர்.*

***1.*** *இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மாகாண சபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.*

*1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கச் சட்டத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2.*** *ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் 25 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "அத்தகைய நிதியாண்டு தொடங்குவதற்குக் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய நிதியாண்டு தொடங்குவதற்குக் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு முன்னர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.*

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

***3.*** *இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்